**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானது என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

### 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம், நியமத்தின் மூலம் தேவைப்படும் போது அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் மீளாய்வாண்டின் வைத்தியசாலைக் கட்டண கடன்பட்டோர் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 1.71 மில்லியனான செலவு மீதி வைத்தியசாலை கட்டணங்கள் கடன்பட்டோர் கணக்குகளில் வரவு மீதிகளிலிருந்தும் ரூபா 2.2 மில்லியனான வியாபாரக் கடன் கொடுத்தோர் வரவு மீதி கடன் கொடுத்தோர் செலவு மீதிகளிலிருந்தும் ஈடுசெய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முன்னைய ஆண்டுகளிலும் சுட்டி | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தொடர்பாக செய்யப்பட்ட திருத்தங்களுக்காக இந்த வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் ஈடு செய்யப்பட்டதாகவும் 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போதும் திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. . | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்த போதும் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 47 ஆம் பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலத் தவறுகள் அவை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக் கூற்றுத் தொகுதிகளில் தவறுகள் இடம்பெற்ற காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டின் சீராக்கங்களாக ரூபா 205.26 மில்லியன் மீதியொன்று முன்கொண்டு வரப்பட்டு திரட்டிய பற்றாக்குறைக்கு சீராக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் சமர்ப்பிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். மேலும் | மேற்படி |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக கிரயம் ரூபா 4,317.17 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உபகரணங்களின் மீளாய்வு மற்றும் மீள்மதிப்பீடு தற்போது நடைபெற்று வருவதாகவும் அந்த பொருட்கள் இப்போது பட்டியலிடப்பட்டு மதிப்பீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. | மேற்படி |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைத்தியசாலைக்கு உரித்தான மொத்தக் காணி 10.0229 ஹெக்டேயராக இருந்த போதும் அதில் 9.8047 ஹெக்டேயர் மாத்திரம் 2022 ஆம் ஆண்டின் போது காணி ரூபா 4,845.50 மில்லியனுக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 0.2182 ஹெக்டேயர் அளவிலான காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மருத்துவமனைக்கு சொந்தமான காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி என கண்டறியப்பட்டதால், முழுமையான கையேற்கும் பணி முடிந்ததும், காணியை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முழுக் காணியையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் வைத்தியசாலை பட்டியல்களில் பிழையானவற்றை சீராக்கம் செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட ரூபா 4.95 மில்லியன் மற்றும் ரூபா 31.12 மில்லியன் கூட்டுத்தொகையான முறையே வரவுத்தாள் மற்றும் செலவு தாள்கள் மற்றும் பெறுமதிகளுக்குரிய வருமானம் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு பதிலாக ரூபா 26.17 மில்லியனான மீதிகளில் வேறுபாடு வருமான சீராக்கம் (Income Adjusment) என நானாவித வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக் கூற்றுகளில் வருமானம் மற்றும் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | பிணை முறி வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டமை 2024 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாகவும் 2023 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய பிணை முறி தொகையில் அடங்கியுள்ள முன்னைய ஆண்டுகளிற்கான சம்பளம் நடப்பாண்டின் வருமானமாக கழிப்பதற்காக பிணை முறி கணக்கு வரவு ழைவக்கப்பட்டு திரண்ட இலாபநட்டக் கணக்கு செலவு வைக்கப்பட்டதாக | இத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பிணை முறி மீறிய 19 தாதி உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய பிணைமுறி வருமானம் ரூபா 33.22 மில்லியன் ஆக இருந்த போதும் ரூபா 37.33 மில்லியன் என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் பெற வேண்டிய பிணை முறி வருமானம் (நடைமுறை சொத்துக்கள்) மற்றும் ஆண்டின் இலாபம் ரூபா 4.11 மில்லியன் கூடுதலாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருந்தன. இந்த உத்தியோகத்தர்களில் மீளாய்வாண்டில் பிணைமுறி மீறிய 19 தாதி உத்தியோத்தர்களிடமிருந்து அறவிடப் வேண்டிய செலுத்திய சம்பளங்களில் மொத்த பெறுமதி ரூபா 31.03 மில்லியன் முன்னைய ஆண்டின் சீராக்கமாக கருதி தவறான வகையில் பிணை முறி வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரட்டிய இலாப நட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ஆண்டின் பிணை முறி வருமானம் மற்றும் இலாபம் அப் பெறுமானத்தினால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கபட்டிருந்தன | 2024 ஆம் ஆண்டில் கணக்குகளில் இருந்து அதை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேற்படி |
| (ஈ) | மீளாய்வாண்டில் தொழிற்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் மீளச் செலுத்துதல் ஆகியவற்றினை கணக்கு வைக்கும் திட்டவட்டமான மற்றும் முறையான நடைமுறையொன்று வைத்தியசாலை சபையினால் இனங் காணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தொழில்சார் கட்டண வருமானமான ரூபா 653.93 மில்லியன் தொகை செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்கள் | தொழில்முறைக் கட்டணங்கள் 2022 ஒக்டோபர் முதல் மருத்துவமனைக் கட்டணத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவு ம் 1998 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட செலுத்தவேண்டிய தொகை எதிர்வரும் | தொழில்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் கொடுப்பனவு தொடர்பான கொள்கையொன் று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டில் பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொழில்சார் கட்டணங்கள் ரூபா 623.94 மில்லியன் அக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் மாதத்திற்குரிய கடன் கடிதங்கள் (Credit Letter) அடிப்படையில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிச் செல்லும் நோயாளிகளின் வைத்தியசாலை கட்டணங்கள் மற்றும் தொழில்சார் கட்டணங்களை திட்டவட்டமாக வைத்தியசாலை கட்டண வருமானங்கள் கணக்கில் ரூபா 62.84 மில்லியன் செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 1998 ஆம் ஆண்டு முதல் காணப்படும் ரூபா 3.62 மில்லியனான செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணக் கணக்கின் மீதியை மீளாய்வாண்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அக்கணக்கில் மேலும் காணப்படும் ரூபா 27.72 மில்லியனான செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டண மீதியாக இருந்த போதும் அம் மீதியை உறுதிப்படுத்த உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | கணக்குகளில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2023 ஆம் ஆண்டில், கொடுப்பனவு செய்வதற்குள்ள . தொழில்சார் கட்டணங்களுக்குரிய விபரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அறவீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் காலாவதியான மருந்துகளுக்காக முறையே ரூபா 9.89 மில்லியன் மற்றும் ரூபா 24.14 மில்லியன் என மொத்தம் ரூபா 34.03 மில்லியன் ஒதுக்கீடு செய்திருந்த போதும் காலாவதியான மருந்துகளுக்குரிய ஒதுக்கீடு தொடர்பாக கணக்கீட்டு கொள்கை ஒன்று வைத்தியசாலையால் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | காலாவதியான மருந்துகளுக்காக ஒதுக்கீட்டு முறைமயை வெளியிட நடவடிக்கை எடுத்து வருவதாக. | காலாவதியான மருந்துகள் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 39.89 மில்லியன் கூட்டுத்தொகையான மின் கட்டணங்கள் மற்றும் நீர் பட்டியல்களின் பெறுமதி அட்டுறுச் செலவினமாக சீராக்கம் செய்யாமை காரணமாக ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் கூடுதலாகவும் நடைமுறை பொறுப்புக்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டு இருந்தன. | 2024 ஆம் ஆண்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக | இத்தவறினை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | எரிக்கும் (Incenerator) இயந்திரத்தின் சேவையுடன் உடன்படிக்கை பிரகாரம் 2023 ஒக்டோபர் 01 ஆந் திகதி முதல் 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட சேவை தொகையில் 2024 ஆம் ஆண்டிற்குரிய | 2024 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2.17 மில்லியன் தொகை முற்கொடுப்பனவாக இனங்காணப்படாமல் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமை காரணமாக ஆண்டின் இலாபம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | இருப்புக்கள் தொடர்பான கணனி (Systolic) முறைமையில் இடம்பெறும் பொருள் பெறுவன பத்திரம் GRN அகற்றல், கணக்கீட்டு கணனி கட்டமைப்பில் (Accpack) நாளது வரையாக்காமை, கணக்கீட்டு கணினி கட்டமைப்பில் பொருள் பெறுவனவு இரண்டு தடவை பதிவு செய்யப்பட்டிருந்தமை, பெறுமானங்கள் வேறுபட்டு பதிவு செய்திருந்தமை, கணக்கீட்டு கணனி கட்டமைப்பில் பணம் செலுத்துவது இடம் பெற்ற போதும் அக்கொடுப்பனவுகள் தனியால் கடன் கொடுத்தோர் மீதிகளுடன் இணக்கம் செய்யாமை மற்றும் தனியால் கடன் கொடுத்தோர் மீதியில் தண்டப் பணம் மற்றும் தாமத சீராக்கக் கட்டணங்கள் போன்றவை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளில் இடம்பெற்றுள்ள தவறுகளை சரி செய்வதற்காக நாட்குறிப்பு உறுதி சீட்டுக்கள் தயாரிக்காமல் வரவுத் தாள் மற்றும் செலவுத் தாள் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய மீதி ரூபா 22.73 மில்லியன் தொகை திரண்ட இலாப நட்டக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | கணக்கு முறைமையில் ஏதேனும் திருத்தங்களைச் செய்யும் போது, வரவு மற்றும் செலவுத் தாள் மூலம் செய்ய முடியுமாக உள்ளதாகவும் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளை தீர்வு செய்தல் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை தயாரிப்பதன் மூலம் செய்ய முடியாது எனவும் | மேற்படி |
| (ஐ) | கடன்பட்டோர் தொடர்பான கொள்கைகளின் பிரகாரம் ஐயக் கடனுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையின் பிரகாரம் 5 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் ஐயக் கடன் ஒதுக்கீடாக ரூபா 6.3 மில்லியன் கூடுதலாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | வேலைக் கட்டிட நிர்மாணத்திற்குரிய செலுத்தப்பட்ட ரூபா 7.11 மில்லியனை வேலை ஆரம்பிப்பு முற்பணமாக காண்பிக்காமல் நிதிக் கூற்றுக்களில் நடைபெறும் மூலதன வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது முன்வைத்தல் தவறொன்றாகவும் 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மேற்படி |

| | | |
|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 3.12 மில்லியனான மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பெறுமதி நன்கொடை கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக கடன்கொடுத்தோர் மீதியாக வைத்த காரணத்தினால் நன்கொடை அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக . | மேற்படி |

### 1.5.3 இனங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மருத்துவ கட்டண கடன்பட்டோர், மருத்துவ ஆய்வு கூட முற்பணம் போன்ற 03 விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள் மற்றும் ஆவணங்களின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 56.77 மில்லியன் வேறுபாடு காணப்பட்டதுடன் அவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டு பிடித்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை களை குறிப்புகள் வழங்கியுள்ளதாக. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் உரிய அட்டவணைகள், பட்டியல்கள் மற்றும் கணனி அறிக்கை என்பவற்றுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 1,899.55 மில்லியனான கடன்கொடுத்தோர். வைத்தியசாலைக் கட்டணங்கள் கடன்பட்டோர் மற்றும் வியாபார கடன்கொடுத்தோர் சேவை கட்டணங்கள் ஆகிய 03 கணக்கு விடயங்கள் தொடர்பில் காலப்பகுப்பாய்வு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு அல்லது கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கணக்கீட்டு முறையின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக்கூடிய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கால பகுப்பாய்வு கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த அமைப்பிற்கான Source code மூல குறியீடு எங்களிடம் இல்லாததால், நியம வடிவமைப்பை (standard format) மாற்ற முடியாது எனவும் மேலும் அந்த பணிப்பாளர் சபை தீர்மானத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளதாகவும் தொழில்முறைக் கட்டணத்தில் 0.15% மாத்திரம் மருத்துவமனை சேவைக் கட்டணமாக | முறைமைக்கு காலப்பகுப்பாய்வு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறவிடப்படுவதற்காக பணிப்பாளர் சபை தீர்மானம் செய்துள்ளது. | |

**1.6 கிடைக்கப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 கிடைக்க வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலும் 01 முதல் 5 ஆண்டு காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய பிணை செலுத்தாமல் சேவையை விட்டுச் சென்றிருந்த 26 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 43.22 மில்லியன் பிணைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மந்த நிலைமையில் காணப்பட்டன | உடன்படிக்கைகளை மீறிய தாதியர்களின் ஒப்பந்த பிரகாரம் பிணை முறிகளை மீளப்பெறுவதற்கு சட்ட அதிகாரிக்கு அறிவித்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்தாக. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 5.68 மில்லியன் இடர் கடன் மீதியை இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இத்தொகையில் 5.12 மில்லியன் 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வரும் மீதியாகும். | அறவிடப்படாதப்படாத கடன் மீதிகள் தொடர்பான தகவல்களை பெற்று, பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் அவ்வாறு முடியாத விடத்து, வழக்கு தொடருவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும். | மேற்படி |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பிரிவுகள் | பதவியணியின் ஒவ்வொரு சேவையினதும் தரத்தினதும் பதவிகளுக்காக தேவையான தகைமைகள், பதவியினரின் சம்பள அளவு, வயதெல்லை மற்றும் ஏனைய விபரங்களை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து தாபனவிதிக் கோவையில் காண்பிக்கப் பட்டுள்ள செயல் ஒழுங்கு முறைகளை பின்பற்றி அந்த நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் அங்கீகாரத்திற்குச் செல்லும் போது இந்தப் பதவிப் பெயர்கள் மற்றும் சம்பளக் குறியீடுகளில் வேறுபாடுகள் காணப்பட்டதையடுத் துசம்பளக் குறியீடுகள் சரி செய்யப்பட்டன. பணிப்பாளர் சபையின் | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை யில் குறிப்பிடப்பட்டு ள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் இது வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தின் பேரில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன. அந்த அங்கீகாரத்திற்க்கு உட்பட்டு, ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு ஏற்கனவே வரைவு ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 ஆம் பிரிவுகள் | வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்படும் நட்டங்கள் தொடர்பாக அதற்கு பொறுப்பானவர்களை நிச்சயிப்பதற்காக பரிசோதனை யொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பான தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்படும் நட்டம் தொடர்பாக பொறுப்பான நபர்களைத் தீர்மானிப்பதற்கான விசாரணைகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 110 | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஏற்படும் சேதங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் சேதங்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வைத்தியசாலையின் வாகனங்களுக்காக முறையான படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சேதங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி 110 இன் பிரகாரம் சேத பதிவேடு தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) நிதிப் பிரமாணம் 1642 | நிறுவனத்தின் வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்களால் அவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களின் சாரதிகளால் இடம் பெறும் திடீர் விபத்துக்கள் தொடர்பாக பொலிசில் | சில வாகன விபத்துக்கள் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும், கவனக் குறைவு காரணமாக கணக்காய்வின் | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறைப்பாடொன்று செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போது உரிய ஆவணங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியவில்லை. தற்போது அனைத்து வாகன விபத்துகள் குறித்தும் பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்படுகிறது. | வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. உயிர் பொறியியல் துறையின் உதவியுடன் மீள் மதிப்பீடு மேற் கொள்ளப்படுவதாக | திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |
| (ஈ) | 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதிய DMS/1758-Vol.1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு முன் மொழிவு தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 61 சம்பளக் குறியீடுகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக சுகாதார அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகவும் எஞ்சியுள்ள 13 சம்பள குறியீடுகளுக்காக வரைவு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன பணிப்பாளர் சபை அங்கீகாரம் அளித்தவுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 303.77 மில்லியனான இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 247.23 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 56.54 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 943.51 மில்லியனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வைத்தியசாலையால் 2022 ஒக்டோபர் முதல் கட்டண கொடுப்பனவு வார்டுகளில் அறைகள் கட்டணங்களுக்காக பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான வரியாக 15 சதவீத வரி சதவீதம் ஒன்று நோயாளிகளின் பட்டியல்கள் இருந்து அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2022 ஒக்தோபர் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பெறுமதி சேர் அடிப்படையிலான வரியாக அறவிடப்பட்ட ரூபா 21.21 மில்லியன் தொடர்பாக 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 3 ஆம் பந்தியில் 21 ஆம் பிரிவின் பிரகாரம் காலாண்டு அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய காலாண்டு அறிக்கைகளை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியேுள்ளேன். | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அடிப்படையிலான சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) .வைத்தியசாலையின் கொடுப்பனவு அறை கட்டணங்களுக்காக மாத்திரம் பெறுமதி சேர் அடிப்படையிலான வரி அறவிடப்பட்டிருந்த போதும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ் வருமானத் திலிருந்து அதற்குரிய செலுத்தப்பட்ட | பெறுமதி கூட்டப்பட்ட வரி (VAT) மருத்துவமனை அறைக் கட்டணத்தில் மாத்திரமே விதிக்கப்படுகிறது, ஆனால் அந்த அறைகள் தொடர்பான செலவுகளைத் தனித்தனியாகக் கண்டறிவது மிகவும் கடினமாக இருந்ததால், விதிக்கப்பட்ட | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி சேர் வரி மாத்திரம் ஈடு செய்யப்படாமல் அறவிடப்பட்ட முழுமையான வரித் தொகையையும் செலுத்திய வரிக்கு ஈடு செய்யப்பட்டிருந்தது. | வரியின் முழுத் தொகையும் செலுத்தப்பட்ட பணத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டது. | |
| (iii) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்படி சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் இணங்காமை காரணமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 5.2 மில்லியன் ஆன தண்டப்பணத் தொகை தொடர்பாக மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அத்தண்டப் பணத்தை விடுவித்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | இது தொடர்பாக ஆய்வு செய்து, கணக்காய்வு பிரிவிற்கு விரைவில் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஆ) | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தொழில்சார் கட்டணங்களாக செலுத்தப்பட்ட வார்டுகளுக்குரிய மருத்துவ மற்றும் ஏனைய பதவியணியினருக்காக செலுத்திய தொகை மற்றும் அந்த வார்டுகளில் இருந்து வைத்தியசாலைக்கு கிடைத்த வருமானம் முறையே ரூபா 648.3 மில்லியன் ரூபா 857.5 மில்லியன் மற்றும் ரூபா 1,111.6 மில்லியனாக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | - |
| i. | வைத்தியசாலையின் வளங்களைப் பயன்படுத்தி கடமை நேரத்துக்கு புறம்பாக செய்யப்படுகின்ற சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமம் ஒன்று அல்லது திட்டவட்டமான கொள்கை ஒன்று இல்லாமல் விசேட வைத்திய நிபுணர்கள் | குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழில்சார் கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்கு பணிப்பாளர் சபை குழுவொன்றை நியமித்துள்ளது. எதிர்காலத்தில் அந்த குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் செயல்படுவேன். | கடமை நேரத்துக்கு புறம்பாக செய்யப்படுகின்ற சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறவீட்டு நடைமுறையொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தமது விருப்பின் பேரில் அறவிடப்பட வேண்டிய கட்டணங்களைத் தீர்மானித்திருந்தனர். அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம் உரிய பட்டியல்களின் பெறுமதியிலிருந்து 24 சதவீதம் முதல் 89 சதவீதம் வரை ஆன வீச்சில் தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. | | |
| ii. | வைத்திய உத்தியோகத்தர்களினால் விடுமுறை தினப் படிகளைப் பெற்றுக் கொண்ட காலப் பகுதியில் தனியார் சேவையில் ஈடுபட்டு தொழிசார் படிகள் அறவிடப்பட்டு இருந்ததுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 07 வைத்திய உத்தியோகத்தர்களால் அவ்வாறு தொழில்சார் கட்டணங்களாக அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 1.52 மில்லியன் ஆக இருந்தது. | இதுபோன்ற தவறுகள் மீண்டும் நிகழாத வகையில், நிர்வாகத் துறைக்கும் கணக்குப் பிரிவிற்கும் இடையே நேரடி ஒருங்கிணைப்பு முறையைப் பின்பற்றி, பணம் செலுத்தும் முன் முறையான சரிபார்ப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | இப்பணத்தை வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 1984 ஜுலை 18 ஆம் திகதிய அமப/1984/ 335(2) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2000 நவம்பர் 15 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் வழமையான கடமை நேரங்களில் கொடுப்பனவு செலுத்தப் படுகின்ற வார்ட் நோயாளிகளுக்காக மேற் கொள்ளப்படுகின்ற சத்திர சிகிச்சைகளுக்காக தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்பட முடியாத | சத்திரசிகிச்சை அறை மற்றும் கணக்கீட்டு பிரிவிற்கு இடையே நேரடி ஒருங்கிணைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்துதல் தொடங்கப்பட்டுள்ளதாக | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அவ்வாறு தொழில் சார் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 4.91 மில்லியன் ஆக இருந்தது. | | |
| (iv) | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பேரில் உதவி மருத்துவர்கள் மற்றும் ஏனைய பதவியணியினருக்காக 2023 ஆம் ஆண்டின் போது தொழில்சார் கட்டணங்களாக ரூபா 60.73 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொழில்சார் கட்டணங்களை ஒழுங்குபடுத்த பணிப்பாளர்கள் குழுவால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதமாக | அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (v) | வைத்தியசாலையில் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கும் தொழில் கட்டணங்களை அறவிடுவதற்கும் முறையான அங்கீகாரம் இன்றி மற்றும் முறையான உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது வைத்தியசாலை பதவியணியில் இல்லாத 08 வெளிவாரி வைத்தியர்கள் வைத்தியசாலை வளங்களை பயன்படுத்தி சத்திர சிகிச்சை மேற் கொண்டு தொழில்சார் கட்டணங்களாக மொத்தம் ரூபா 11.98 மில்லியன் நோயாளிகளிடம் இருந்து அறவிடப்பட்டு இருந்ததுடன் அதில் வைத்தியசாலைக்கு சேவை கட்டணமாக 0.15 சதவீதத்தை மாத்திரம் செலுத்தியிருந்தனர். | முகாமைத்துவச் செலவினமொன்றாக சேவைக் கட்டணமொன்று அறவிட்ட போதும் இதற்காக ஏற்படும் பிற செலவுகள் மற்றும் 30 சதவீத இலாப எல்லைலையும் நோயாளியிடமிருந்து அறவிடப்படுவதாகவும் அந்த மருத்துவர்களுக்கு நோயாளர்களை விசேட வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ் மாத்திரம் அனுமதிக்கலாம் | வளிவாரி வைத்தியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் போது பொருத்தமான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் பொறுப்பு தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vi). | 2023 ஆம் ஆண்டில் பதவியணியினருக்குச் செலுத்தியிருந்த ரூபா 601.74 மில்லியனான மொத்த தொழில்சார் கட்டணங்களில் வைத்தியசாலை | அந்த பணிப்பாளர் சபையின் தீர்மானத்தைத் தேடிக் கொள்வது கடினமாக உள்ளது. மருத்துவமனை சேவைக் கட்டணமாக தொழில்முறைக் கட்டணத்தில் 0.15% மட்டுமே | வைத்தியசாலையால் தொழில்சார் கட்டணமாக செலவிடப்பட்ட நிர்வாக செலவினத்தை அறவிடும் நடைமுறையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திற்கு செலவிடப்பட்டிருந்த மொத்த சேவை கட்டணம் ரூபா 945,345 மில்லியன் மாத்திரமாக இருந்தது. 1999 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீத சேவை கட்டணம் மாத்திரம் அறவிடப்படும் நடைமுறையை செயல்படுத்திய உரிய பணிப்பாளர் சபை தீர்மானமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் காலரீதியாக தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து இருக்கவில்லை. | அறவிடப்படுவதாக பணிப்பாளர் சபைக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் கட்டணத்தை அப்பெறுமதியில் வைத்திருக்க பணிப்பாளர் சபை தீர்மானத்துள்ளதாக | தயாரிக்கப்பட வேண்டும். |
| vii. | வைத்தியசாலை சபையால் வைத்தியசாலை பதவியணியினருக்காக செலுத்தப்படுகின்ற துறைசார் கட்டணங்கள் அடிப்படையில் செலுத்தும் வரி கழிக்காமல் 2023 ஜூன் 08 ஆம் திகதிய S.B.M. 1.4 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 22 ஆம் திகதி SEC/2022/E/03 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 100,000 இற்கு மேற்பட்ட துறைசார் கட்டணங்கள் கொடுப்பனவு அடிப்படையில் 2023 ஜனவரி மாதத்தில் இருந்து 5 சதவீதமான நிறுத்தி வைத்தல் வரி ஒன்று அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து மற்றும் பணிப்பாளர் சபையின் படி தொழில்முறை கட்டணத்தில் உழைக்கும் போது வரி விதிப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. எனினும் வைத்தியசாலையின் மேன்முறையீட்டுக்கு இணங்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் தொழில்சார் கட்டணங்கள் அடிப்படையில் செலுத்த வேண்டும் என வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013/2014 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக வைத்தியசாலையில் வைத்தியசாலை பதவியணியினருக்கு செலுத்திய தொழில்சார் கட்டணங்கள் அடிப்படையில் உழைக்கும் போது செலுத்தும் வரி கணக்கிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | | |
| (இ) | 1996 ஜுலை 17 ஆந் திகதிய 96/1347/120/143 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வெவ்வேறு தரங்கள் மற்றும் சுகாதார அமைச்சின் வெவ்வேறுபட்ட சமமான தரங்கள் அல்லது ஏனைய திணைக்களங்களில் சமமான பதவிகளுக்கு இடையே சம்பள விலகல் 35 சதவீதமான அளவில் பேணிச் செல்வதற்கு பொது கொள்கை ஒன்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 15 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின் கீழ் வைத்தியர், தாதி மற்றும் | சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின் கீழ் துணை மருத்துவ சேவை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மேலதிக கடமை கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு 35% சேகரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது பஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்தின். 07 ஆம் இலக்க பந்தியின் 2 (C) பிரிவுகளின் கீழ் மருத்துவமனை சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | உரிய அதிகார அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

குறைநிரப்பு வைத்திய சேவையின் உத்தியோகத்தர் களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் மேலதிக கடமைப் படிகள் மற்றும் மேலதிக நேர பணிகள் என்பவற்றிக்காக 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட மேலதிக கடமைகள் மற்றும் மேலதிக படிகளுக்கு 35 சதவீதம் சேர்க்கப்பட்டு சுற்றறிக்கை மூலம் வழங்கப்படும் படிகளை விட உயர்ந்த விகித பெறுமதியின் வைத்து முறையே 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா 168.43 மில்லியன் ரூபா 162.47 மில்லியன் மற்றும் ரூபா 158.07 மில்லியன் என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது இது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் ஒன்றையோ பெற்றுக் கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) வைத்தியசாலை சபையில் காணப்படுகின்ற வைத்தியசாலை கட்டண பட்டியல்கள் மற்றும் இருப்பு தொடர்பாக Systolic கணனி முறைமை தகவல்களை கணக்கீட்டு கணனி Accpack முறைமைக்கு உள்ளடக்கியதன் பின்னர் இடம்பெறும் மாற்றங்களை மீண்டும் கணக்கீடு முறைமையில் நாளது வரையாகாமை காரணமாக முறைமையில் காணப்படுகின்ற கொள்வனவு கிரயம், கடன் கொடுத்தோர் கடன்பட்டோர் மற்றும் வைத்தியசாலை கட்டண வருமானம் போன்ற உருப்படிகளின் பெறுமதி வேறுபடுதல் உட்பட ஒரே முறைமையில் Systolic வேறுபட்ட நாட்களில் மீதிகள் வேறுபடுவது அவதானிக்கப்பட்டதால் அந்த உறுப்படிகளை சரியான

இருப்பு தொடர்பாக Systolic அமைப்பில் உள்ளஇந்த பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தெரிவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இந்த தற்போதைய அறிக்கைகளின் சேகரிப்பில் ஏற்பட்ட மாற்றம் குறித்து தொடர்புடைய நிறுவனத்துடன் சரிபார்க்க மருத்துவமனையின் தகவல் தொழில் நுட்பப் பிரிவிற்கு நடவடிக்கை எடுப்பதாக

கணனி முறைமைக்கு இடையே அந்நியோன்ய தொடர்பாடலொன்றை ஏற்படுத்துதல் மற்றும் தரவுகளை உள்ளடக்குதல் பரீட்சித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கு உரிய நடைமுறை கோவையை உரிய அதிகாரத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு நடவடிக்னை எடுக்க வேண்டும்.

பெறுமதி நிதிக்கூற்றுகளில் நிருபணம் ஆகின்றதா என்பது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. வைத்தியசாலையில் காணப்படுகின்ற கணனி முறைமைக்கு இடையே பரஸ்பர (System Link) தொடர்பு ஏற்படுத்தப்படாமை கணனி முறைமையில் தரவு உள்ளடக்கத்தை பரீட்சித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்குரிய உரிய நடைமுறை முறையான அதிகாரத்தின் கீழ் செயல்படுத்தப்படாமை இதற்கான காரணமாக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நோயாளிகளின் மருத்துவப் பட்டியலுக்காக பணம் அறவீட்டின் செயன் முன்னேற்றம் தொடர்பாக செய்யப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) திட்டவட்டமான அடிப்படை ஒன்று இல்லாமல் உயர்மட்ட முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சில நோயாளர்களின் வைத்தியசாலை கட்டண பட்டியல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமல் கொடுப்பனவு களிலிருந்து விடுவிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை மொத்தம் ரூபா 28.82 மில்லியன் பட்டியல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு செலவு தாள் மூலம் கணக்கு களிலிருந்து மொத்தம் ரூபா 6.4 மில்லியன் பட்டியல்களை அகற்றுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | திடீரென மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படும் நோயாளியின் உயிர் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படுகின்ற அவசர சிகிச்சைக்காக உரிய நோயாளிக்கு பணம் செலுத்தும் இயலுமை இல்லாதிருப்பினும் அக்கட்டணங்களை தொடர்புடைய கட்டணத்தை விட்டு விடுவதறகும் மூளைச்சாவு அடைந்த நோயாளியின் உறுப்புகள் வாங்கப்படும் வரை செலுத்த வேண்டிய கட்டணத்தை விட்டு விடுவதறகும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் முதல் சில நோயாளிகளுக்குப் பொருந்தக் கூடிய கட்டணத்தைத் | கட்டணங்களிலிருந்து விடுவிப்பினை பெறுவதற்கு உரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடுவிப்பதற்கும் பணிப்பாளர் சபை தீர்மானங்களை எடுத்துள்ளது. மேலும், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பட்டியல் விலக்குகளும் நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விலக்களிக்கப்பட்ட கட்டணங்கள் குறித்த அறிக்கையை வழங்குமாறு சுகாதார அமைச்சின் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பணிப்பாளர் சபை அனுப்பி வைத்துள்ளதாக | |
| (ii) | வைத்தியசாலைக் கட்டணப் பட்டியலை செலுத்தாமல் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிச் சென்ற நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 23.07 மில்லியனான கடன் பட்டோர் மீதி ஒன்று காணப்பட்டதுடன் இப் பட்டியல்களின் பெறுமதி ரூபா 360 முதல் ரூபா 2.04 மில்லியன் வரையான வீச்சில் காணப்பட்டது நோயாளிகள் வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் போது மருத்துவ கட்டணங்களை அறவிடாமைக்கான காரணங்கள் கணக்காவிற்கு தெரியப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல், சட்ட ஆவணத்தில் நோயாளர் தரப்பில் கையொப்பம் பெறப்படுவதாகவும். இதன் பிரகாரம், வைத்தியசாலைக் கட்டணத்தைச் செலுத்தாத நோயாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்குவதாக | நோயாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | இருப்பு மற்றும் பட்டியல் தொடர்பாக கணினி (Systolic) முறைமையின் தகவல் பிரகாரம் சிகிச்சை பெற்று வைத்தியசாலையில் இருந்த வெளியேறிச் சென்று எனினும் பட்டியல்களைச் கொடுப்பனவு செய்யப்படாத 22 நோயாளிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 2.05 மில்லியன் ஆன வைத்தியசாலைக் கட்டண பட்டியல்கள் காணப்பட்டதுடன் பட்டியல்களை செலுத்தாத நோயாளிகள் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிச் சென்றிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக இருந்தது. | மேற்படி | நோயாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய எனினும் இறுதிப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படாதிருந்த 08 நோயாளிகளின் கணனி முறைமையில் நாளாந்த பட்டியல் தயாரிக்கப்பட்டு இருந்ததுடன் 2024 மே 03 ஆம் திகதி வரையிலும் பட்டியல்கள் கூட்டுப் பெறுமதி ரூபா 35.72 மில்லியன் ஆக இருந்தது. இந் நோயாளிகளை இனங் கண்டு வைத்திய சிகிச்சைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து கணினி அமைப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நோயாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | கடன் கடிதங்கள் (Credit Letter) சமர்ப்பித்து வைத்திய சாலையிலிருந்து வெளியேறிய நோயாளிகளின் வைத்தியசாலைக் கட்டணம் குறித்த காப்புறுதி நிறுவனங்கள் அல்லது சேவை நிறுவனங்களிடமிருந்து மீளளிக்கப் படாமல் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஒரு மில்லியனை விஞ்சிய 90 நாட்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 29.62 மில்லியனான கடன் மீதி ஒன்று காணப்பட்டது | சில காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து மருத்துவமனை கட்டணம் பெறுவதில் தாமதம் ஏற்படுவதை ஏற்றுக் கொண்டு, இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ˙ களுக்கு ஆலோசனை வழங்கப்ப:டுவதாக | விரைவில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

(ஆ) 2016 நவம்பர் 03 ஆந் திகதி ரூபா 23.54 மில்லியன் வெட் உடன் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இருந்த சிகிச்சை கழிவுகளை எரிக்கும் இயந்திரத்தின் (Incinerator) மீளாய்வாண்டில் பராமரிப்பு சேவை மற்றும் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 22.9 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நீருக்காக செலவிடப்பட்ட தொகையை வேறாக இனங்காண முடியாமல் இருந்தது. இதன் மூலம் நாளாந்தம் 300 கிலோ கிராம் முதல் 400 கிலோ கிராம் அளவிலான சிகிச்சை கழிவுகள் எரிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் உள்ளவாறு எரிக்கப்பட்ட அளவு தொடர்பான அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை இந்த இயந்திரத்தின் பயன்பாடு மற்றும் பராமரித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இயந்திர கொள்வனவு சேவை உடன்படிக்கையொன்று இல்லாமல் இயந்திரத்தை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு இருக்கையில் இயந்திரத்தின் இரண்டு வருட உத்தரவாத காலம் கடந்ததன் பின்னர் இயந்திரத்தை கொள்வனவு செய்த நிறுவனத்துடன் பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 6.91 மில்லியன் கூட்டுத்தொகையான சேவைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | இயந்திரத்தின் கிரயத்தை மாத்திரமே அடிப்படையாக வைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்துள்ளதாகவும் பொருத்தமான சேவைக்குழுவொன்று . பயிற்றுவிக்கப<br>• படாமையாலும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக பராமரிப்ப நடவடிக்கைககள் முறையாக மேற்கொள்ள முடியவில்லையெனவும் உயிரியல் பிரிவின் பொறியியலாளர் குறிப்பிட்டுள்ளதன் பேரில்<br>• ஆரம்ப கேள்வியில் குறிப்பிடப்பட்ட விலைகளுக்கு புறம்பான விலைகளின் கீழ் ஒப்பந்தம் செய்ய நேர்ந்ததாக | இயந்திரத்தின் கிரயத்தை மதிப்பீடு செய்யம் போது பராமரிப்பு சேவைக் கிரயம் தொடர்பாக மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியதுடன் வைத்தியசாலைக்கு பாதகமான பங்களிப்பு வராத வகையில் தொழில்நுட்ப குழு தீர்மானம் எடுத்தல் வேண்டும். |
| (ii) | பராமரிப்பு சேவைகளுக்காக கருத்திற் கொள்ளக் கூடியளவு பணம் செலவு செய்யப்பட்டிருந்த போதும் | இந்த இயந்திரம் பழுதுபார்க்கப்பட்ட பிறகு மருத்துவ கழிவுகளை முழுமையாக எரிக்க | திருத்த வேலைகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரத்தின் மூலம் சிகிச்சை கழிவுகள் முழுமையாக எரியும் நிலைக்கு உட்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2023 நவம்பர் 23 ஆந் திகதி காலாவதியாகியிருந்த போதும் பராமரிப்பு சேவைகள் நிறுவனத்தினால் அத்தியவசிய திருத்த வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படாமையால் அதற்குரிய புகை சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமை காரணமாக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு தாமதாகியிருந்தது. | எதிர்பார்க்கப்படுகிறது, அதன்படி, அபாயகரமான கழிவு (Hazardous Waste) முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதன் மூலம், இந்த எரியூட்டியால் அகற்றப்படும் சாம்பல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளின் மேற்பார்வையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றப்படும் எனத் தெரிவித்துக் கொள்வதாக | வேண்டும். |
| (iii) | 2022/2023 ஆம் ஆண்டிற்குரிய காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தின் 4.7 மற்றும் 4.8 ஆம் பிரிவுகளின் பிரகாரம் எஞ்சும் சாம்பல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அச்சாம்பலுக்கு இடையே பகுதியளவில் எரிந்த சிகிச்சை கழிவுப் பொருட்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது சுற்றாடலுக்கு பாதிக்கும் வகையில் வெளியேற்றப்பட்டு திறந்த வெளிகளில் குவித்து வைப்பதால் மழையுடன் கூடிய காலப்பகுதியில் சுற்றியுள்ள நீர் நிலைகளில் சேரும் ஆபத்து காணப்பட்டது. அத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்கொள்ளப் பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஆபத்தான கழிவுகள் (Hazardous Waste) முகாமைத்து வத்திற்குரிய கழிவு முகாமைத்துவ | இந்த இயந்திரம் பழுதுபார்க்கப்பட்ட பிறகு மருத்துவ கழிவுகளை முழுமையாக எரிக்க எதிர்பார்க்கப்படுகிறது, அதன்படி, அபாயகரமான கழிவு (Hazardous Waste) முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதன் மூலம், இந்த எரியூட்டியால் அகற்றப்படும் சாம்பல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளின் மேற்பார்வையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றப்படும் எனத் தெரிவித்துக் கொள்வதாக | சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கழிவுகளை வெளியேற்றுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை | | |
| (இ) | வாடகை அடிப்படையில் நடத்திச் செல்லப்படுகின்ற நிறுவனங்களில் வாடகை வருமானத்தை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| | (i) வைத்தியசாலை வளவில் வாடகை அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றிடம் இருந்து முறையே மாதாந்தம் 45,000 மற்றும் ரூபா 15,000 என குத்தகை வாடகை அறவிடப்பட்டிருந்த போதும் இரு தரப்பினருடனும் அதற்குரிய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் வாடகை ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்கினேன். | விரைவில் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | (ii) 2006 ஆம் ஆண்டின் போது வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருந்த அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்து உணர்வு உடன்படிக்கையின் காலரீதியாக வாடகை தொகையை அதிகரிப்பதற்கும் புதிய உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கப்படாமையால் 2006 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை வைத்தியசாலையில் மாதாந்த வாடகையாக ரூபா 85,000 தொகையும் 2018 ஆண்டு முதல் 120,000 என வாடகை அறவிடப்பட்டிருந்தது 2023 ஜூன் 30 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் மாதாந்த வாடகை ரூபா 150,000 வரை அதிகரிப்பதற்கும் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் வாடகையை தீர்மானிப்பதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கும் புதிய உடன்படிக்கையில் மேற் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற ஏற்பாடு செய்வேன். மருந்தகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (iii) உணவு விற்பனைச்சாலை ஒன்றினால் பயன்படுத்தப்படுகின்ற நீருக்காக உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் கட்டணம் ஒன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த கடைகளுக்கு நீர் மீட்டர்களை பொருத்தி, எதிர்காலத்தில் நீரைப் பயன்படுத்துவதற்காக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் நிரந்தரமாக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் பதவிக்காக நிரந்தர பதவியின் சம்பளத்தில் 1/4 கடமை மேயுகை படி ஒன்று கொடுப்பனவிற்கு உட்பட்ட வகையில் கடமை மேவுகை அடிப்படையில் 2021 ஜூலை 28 ஆம் திகதி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார் அந்த உத்தியோகத்தரின் சம்பளம் சுகாதார அமைச்சினால் செலுத்தப்படுவதாகவும் கடமை மேவுகைக்குரிய படிகள் மாத்திரம் வைத்தியசாலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன | | |
| (i) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவின் பிரகாரம் வேலை மேவுகைக்கு உரிய மேலதிக வேதனமொன்றை பெற்றுக் கொள்வதற்கு உரித்தில்லாத போதிலும் வைத்தியசாலையால் இந்த உத்தியோகத்திற்கு 2021 ஜூலை 28 ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5.66 மில்லியன் மற்றும் 2023 செப்தம்பர் 30 ஆம் திகதி வரை மேவுகை படிகளாக ரூபா 775,170 தொகை என மொத்தம் ரூபா 6.4 மில்லியன் தொகை தாபன விதிக்கோவைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வேலை மேவுகை படிகள் கொடுப்பனவு 2023 ஒக்டோபர் மாதம் முதல் | கடமை மேவுகை படியொன்று வழங்கல், 2023 ஒக்தோபர் முதல் இடை நிறுத்தப்பட்டதாகவும் கூடுதலாக செலுத்திய படிகளை அறவிடுமாறு கணக்கு பிரிவிற்கு அறிவிக்கப்பட்ட போதும், முன்னாள் தலைவரின் ஆலோசனையின் பேரில் அறவீடு இடை நிறுத்தப்பட்டதாக | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டு இருந்த போதும் இதுவரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | வைத்தியசாலையில் நிரந்தர பதவியணியில் நிரந்தர கடமையொன்றோ அல்லது பிரதி பணிப்பாளர் பதவியில் கடமை தவிர வேறு கடமை ஒன்று தவிர வேறொரு கடமை கையளிக்கப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு கடமை பட்டியல் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி காலப்பகுதிக்காக மேலதிக கடமைப் படிகளாக ரூபா 4.77 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 மே 25 ஆம் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் PED01/2015 இன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்றை பயன்படுத்துவதற்கு உரித்து இல்லாத இந்த உத்தியோகத்தரிற்கு எரிபொருள் படிகளாக ரூபா 1.28 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக இருந்தது. | தற்போது அந்த உத்தியோகத்தருக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் , இந்த உத்தியோகத்தருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தத் தகுதியற்றவர், ஆதலால் இந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு நிறுத்தப்பட்டு, சுற்றறிக்கையின் 4 பந்தியின் பிரகாரம் 2024 பெப்பவரி 03 முதல் வீட்டிலிருந்து கடமை நிலையத்திற்குச் செல்வதற்கான குழாம் வாகனம் சாரதியுடன் இணைக்கப்பட்டது. அவ்வாறு இருந்தும் அன்றைய தினமே இந்த உத்தியோகத்தர் 4 தடவை வாகனத்தை எடுத்துச் செல்வதால் அதிக செலவு ஏற்படும் என தெரிவித்துவிட்டு, முன்னால் தலைவரின் அங்கீகாரத்தை பெற்று வாகனத்தை அவரின் வீட்டில் தரித்து வைப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மரணாக கொடுப்பனவு செய்யப்பட்ட படிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை தற்காலிகமாக இந்த வேலை மேவுகை நியமனம் வழங்கப்பட்டிருந்த போதும் இதுவரை 2½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் நிரந்தர அடிப்படையில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிரதி பணிப்பாளர் பதவிக்கு புதிய ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் நேர்முக பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் நடைமுறையும் பணிப்பாளர் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக வும் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படும் வரை வரை முன்னாள் தலைவர் அதில் வைப்பதற்கு வாய்மொழி அறிவுறுத்தல்களின் பேரில் தற்காலிக மாக நிறுத்தியுள்ளதாக | நிரந்தர அப்படையில் பற்றாக்குறை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேுண்டும். |
| (இ) | வைத்தியசாலைக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றைத் தயாரிக்கும் செயற்பாடு 2023 ஏப்ரல் 27 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் குழு ஒன்றுக்கு கையளிக்கப்பட்டு மீளாய்வாண்டில் குழுவிற்கு ரூபா 518,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 84 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்த போதும் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 12 ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குரிய சம்பள குறியீடுகள் பொருந்தாமை காரணமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் ஏற்கனவே வரைவு ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்துள்ளதாகவும் அவ் வரைவினை நிர்வாக சபையினால் சுகாதார அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரத்தை பெற்று எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் எண்ணிக்கையை மிகைத்து 3 பதவிகளுக்காக 266 உத்தியோகத்தர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வராத பதவி ஒன்றிற்காக 04 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். | இந்த மருத்துவமனையில் முகாமைத்துவ உதவியாளர்கள் ஓடர்லி மற்றும் சுகாதார உதவி அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது குறியீடுகளில் மாற்றம் காரணமாக ஆகியவை இந்த சிக்கலை சுட்டிக் காட்டுகின்றதாகவும் Philebotomist பதவி இதுவரை அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை என்பதாகவும் | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வைத்தியசாலை சேவையில் இருந்து 2020 ஏப்ரல் 24 ஆம் திகதி ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தருக்கு ரூபா 284,784 தண்டபணத் தொகையுடன் மொத்தம் ரூபா 2.18 மில்லியன் பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | இந்த உத்தியோகத்தரின் நியமனம் மற்றும் சம்பளக கொடுப்பனவு மற்றும் பதவி பெயர் அங்கீகரிக்கப்படாமை மற்றும் மனித வளத் தலைவர் பதவியின் கடமைகளை நிறைவேற்று வதற்காக படி கொடுப்பனவு தொடர்பாக முறையே 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வினால் 02 சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டு இருக்கையில் ஆரம்ப பரிசோதனைக்காக உத்தியோத்தர் ஒருவர், இவ் உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னைய திகதியில் நியமிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்று மேற்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த விசாரணை ஆரம்ப புலனாய்வொன்றல்ல பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு தனி நபர் விசாரணை குழுவொன்றினால் அவரது தீர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் போது உருவாகிய சிக்கலைத் தீர்ப்பதற்காக் குழுவால் நடத்தப்படும் விசாரணையொன்றாக | விரைவில் முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்றையும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முகாமையால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஆரம்ப பரிசோதனை பிரகாரம் தவறாக உழைத்த சம்பளமாக கணக்கிடப்பட்ட ரூபா 1.17 மில்லியன் தொகை மற்றும் கணக்காய்வு ஐயாவினாவின் பிரகாரம் மனிதவள தலைவர் பதவியில் கடமை நிறைவேற்றியமைக்காக தவறான வகையில் செலுத்திய படிகளாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1.58 மில்லியன் என மொத்தம் ரூபா 2.75 மில்லியன் தொகையை அந்த உத்தியோகத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | படிகளாக செலுத்தப்பட்ட இந்தத் தொகையை அறவிடுவதற்காக பணிப்பாளர் சபை பணியாற்றிய போதிலும், தொழில் நீதிமன்றத்தில் அத்தொகையை வைப்புச் செய்யுமாறு குறிப்பிட்டிருந்தாகவும் ஆனால் நீதிமன்றம் உரிய தொகையை அறவீடு செய்யாமல் அத்தொகையை விடுவித்துள்ளதாகவும். | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (iii) | உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்கு ஈடு செய்யப்படும் நோக்கில் அவரின் பணிக்கொடை தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் உரிய உத்திறியோ கத்தரினால் தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்த பின்னர் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டிருந்ததுடன் அவ்வழக்குக்குரிய வழக்கு கோவை ஒன்று கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் குறித்து ரூபா 284,784 தண்டப் பணத்துடன் மொத்தம் ரூபா 2.18 மில்லியன் பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>முகாமையால் துரித ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக தவறுதலாக செலுத்திய தவறாக செலுத்திய சம்பளம் படிகள் மற்றும் பணிக்கொடை, தண்டப்பணம் உட்பட ரூபா 3.04 மில்லியன் கொடுப்பனவு இடம் பெற்றுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குறித்த கோப்புகள் மேற்படி அனைத்தையும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக | |

## 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சுகாதார அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து 06 வாகனங்கள் வைத்தியசாலைக்கு கிடைத்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதும் இந்த அறிக்கை திகதி வரை வைத்தியசாலைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரித்தை கையேற்பது தொடர்பான கடிதங்கள் மற்றும் பரிமாற்ற அறிவிப்புகள் சுகாதார அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய பிரிவுகளுக்கு நினை வூட்டல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | வாகனத்தை கையேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | திடீர் விபத்துக்கு உட்பட்டிருந்த மோட்டார் வாகனம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1) ஒன்றின் பிரகாரம் ஆரம்ப விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர் நிச்சயிக்கப்படாமல் இருந்ததுடன் விபத்து | கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையின் போது, கராஜ்கள் மூடப்பட்டமை பெறுகை குழுக்களால் | பிழைகளை சரியாக இனங்கண்டு விரைவில் திருத்த |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்று இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்து திருத்த நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்தாத காரணத்தினால் காப்புறுதி நிறுவனத்தினால் காப்புறுதி மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. திருத்தங்களுக்காக தனியார் கம்பனியால் ரூபா 489,200 ஆன மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் திருத்த நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளாமையால் வாகனத்தில் சேதங்கள் இடம்பெற்றிருந்த உரிய கம்பனி ரூபா 1.73 மில்லியனுக்கு மதிப்பீடு ஒன்றை சமர்ப்பித்து இருந்தது. முற்பணமாக ரூபா 97,840 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் உரிய காலப்பகுதியில் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக பாரிய செலவினம் ஒன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | தீர்மானம் எடுத்தலில் தாமதம் சமர்ப்பித்த விலை முன் மொழிவுகள் அதிகமாக இருந்தமையால் மற்றும் அங்கீகாரம் அளிக்காத காரணத்தால் பணிப்பாளர் சபை அறிவித்தலின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் அங்கீகாரம் பெற்ற லக்திவ பொறியியலாளர் கம்பனி மூலம் திருத்த வேலைகள் செய்யப்பட்டதாகவும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாத காரணத்தினால் காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாக | வேலைகளை செய்தல் வேண்டும். |
| (iii) | 2021 மே மாதம் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த பிணியாளர் வண்டி ஒன்று 2022 பெப்ரவரி மாதம் அனுப்பி வைக்கப்பட்டு இருந்ததுடன் அந்த பிணியாளர் வண்டி திருத்த வேலைக்காக மீளாய்வாண்டில் வைத்தியசாலையால் ரூபா 1.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதும் காற்று சீராக்கி முறைமை முறையாக செயற்படுத்தப்படாமை, பின்பக்க கதவு பழுதடைந்த நிலையில் காணப்பட்டடை மற்றும் வண்டியின் உட்பகுதி நோயாளிகள் போக்குவரத்துக்கு பொருத்தமான நிலைமையில் காணப்படாமை காரணமாக பிணியாளர் வண்டியொன்றாக வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாமல் இருந்தது | நிறுவகத்தினால் என்ஜினுக்குரிய குறைபாடுகள் மாத்திரம் திருத்தம் செய்யப்பட்டதாகவும் பிணியாளர் வண்டி அதிகளவிலான காலப்பகுதியில் கராஜில் நிறுத்தி வைத்தமை மற்றும் என்ஜின் முழுமையாக கலற்றி திருத்தம் செய்யப்படடதன் காரணமாக உள்ளே அசுத்தமடைந்தமை மற்றும் காற்றுச் சீராக்கி முறைமை பழுதடைந்தமை இடம்பெற்றுள்ளதாக. | மேற்படி |